## தேசிய விஞ்ஞான மன்றம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பொன்று உள்ளடங்கலாக, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது.

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்,

- மன்றம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், மற்றும்

- மன்றத்தின் வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| தொடர்புடைய நியமங்களுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பிரிவின் பிரகாரம் பயன்பாட்டிற்காகக் காணப்படும் போது தொட்டுணரமுடியாத சொத்துக்கள் பெறுமானத்தேய்விடப்பட வேண்டிய போதிலும், 2018 ஆகஸ்ட் 23 இல் ரூபா 5,786,158 கிரயமொன்றில் கொள்வனவுசெய்யப்பட்ட Microsoft Office and Project 365 மென்பொருள் கொள்வனவு திகதியிலிருந்து | வருடாந்த கணக்குகள் - 2019 இல் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்தொன்றின் பெறுமானத்தேய்வு அது பயன்பாட்டிற்குக் காணப்படும் போது ஆரம்பிக்கப்படல் வேண்டும். |

பெறுமானத்தேய்விடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த மென்பொருள் 2019 மார்ச் 28 இலிருந்து பயன்படுத்தப்பட்டிருந்தமையினால், மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு ரூபா 415,335 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | ஆராய்ச்சி செயற்திட்ட வழிகாட்டல்கள் 5 ஆம் பந்தி | ஆராய்ச்சி மற்றும் நிதிசார் செயல்முன்னேற்றம் ஒவ்வொரு ஆண்டினதும் யூன் 15 மற்றும் திசெம்பர் 15 இல் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 13,988,789 பெறுமதியுடைய 07 செயற்திட்டங்களுடன் தொடர்புடைய செலவினம் தொடர்பான அறிக்கைகள் உரிய காலப்பகுதிக்குள் பெறப்பட்டிருக்கவில்லை என மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பொன்றில் வெளிப்படுத்தப்பட்டது. | சில மானியங்களுடன் தொடர்புடைய இடைக்கால நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பித்தலில் தாமதங்கள் காணப்பட்டன. ஒப்பந்த உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு நன்கொடை அளிக்கப்பட்டவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளனர். | ஆராய்ச்சி செயற்திட்ட வழிகாட்டல்களின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் ஆராய்ச்ச மற்றும் நிதிசார் செயல் முன்னேற்றங்கள் யூன் 15 மற்றும் திசெம்பர் 15 இல் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2015 மே 25 இன் PED 1/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பிரிவு | ஒதுக்கப்பட்ட அலுவலக வாகனம் அல்லது போக்குவரத்துப் படியொன்றுக்கு உரித்துடைய உத்தியோகத்தரொருவர், நிறுவனத்தின் ஏனைய எவ்வித வாகனத்தையும் பயன்படுத்துவதற்கு அனுமதியளிக்க கூடாத போதிலும், போக்குவரத்துப் படியினைப் பெற்ற உத்தியோகத்தரொருவர் 05 சந்தர்ப்பங்களில் நிறுவனத்தினால் உரிமையைக் கொண்ட வாகனமொன்றை பயன்படுத்தியிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | நிறுவனத்தின் வாகனம் ஏனைய உத்தியோகத்தர்களுடன் அதே இடத்தில் அதே நேரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்குபற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது | ஒதுக்கப்பட்ட அலுவலக வாகனம் அல்லது போக்குவரத்துப் படியொன்றுக்கு உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு நிறுவனத்தின் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படக் கூடாது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவை தொடர்புடைய முன்னைய ஆண்டிற்கான ரூபா 17,990,000 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 31,393,000 பற்றாக்குறையொன்றாகக் காணப்பட்டமையால், நிதி விளைவில் ரூபா 13,403,000 பற்றாக்குறையொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. ரூபா 13,600,000 இனால் சம்பளங்கள் மற்றும் கூலிகள் அதிகரித்தமை மற்றும் ரூபா 6,474,000 இனால் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகள் அதிகரித்தமை மேற்குறித்த பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ஆராய்ச்சி மானியங்களின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 46,768,435 பெறுமதியுடைய 18 செயற்திட்டங்களில் ரூபா 41,980,228 பெறுமதியுடைய 16 செயற்திட்டங்கள், கணக்காய்வுத் திகதியான 2019 மார்ச் 31 வரையிலும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | தேசிய விஞ்ஞான மன்றம், அடிப்படை மற்றும் பிரயோக அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு ஆதரவளிக்க 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந்த ஆய்வுகளிலிருந்து சமூக மற்றும் பொருளாதார நலன்களினை அறுவடை செய்வது காலமெடுக்கும் செயற்முறையொன்றாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், தேசிய விஞ்ஞான மன்றம் இந்த ஆய்வுகளிலிருந்து சமூக மற்றும் பொருளாதார நலன்களினை அறிக்கையிடும் நடவடிக்கையினை எடுக்கின்றது. மேலே குறிப்பிடப்பட்டவற்றில், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தியின் நோக்கங்கள், கொள்திறன் விருத்தி, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அறிவுத்திறனை முன்னேற்றுதலில் அபிவிருத்தி செயன்முறை என்பன நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. | ஒவ்வொரு சாத்தியமான சந்தர்ப்பத்திலும் ஆராய்ச்சிகளின் வெளியீட்டினை சமூகம் அறிந்து கொள்வதற்கு ஆராய்ச்சி யாளர்களினை வழிநடத்துவதற்கு மற்றும் அந்த வெளியீடுகளினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான முறையொன்று தாபிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நவீன தொழில்நுட்பமொன்றின் அடிப்படையில் புதிய முயற்சிகளுக்கான நிதிசார் உதவிகளை வழங்குவது தொழில்நுட்ப பணிகளை வழங்குவதன் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. இருப்பினும், 2011 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை | நவீன தொழில்நுட்பத்தின் அடிப்படையில் தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் புதிய முயற்சிகளை உருவாக்குதல் என்பன தொழில்நுட்ப மானியங்களை வழங்குவதன் இரண்டு பிரதான நோக்கங்களாகக் | ஒவ்வொரு சாத்தியமான சந்தர்ப்பத்திலும் ஆராய்ச்சிகளின் வெளியீட்டினை சமூகம் அறிந்து கொள்வதற்கு ஆராய்ச்சி |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவிகளிலிருந்து பூர்த்தியாக்கப்பட்டுக் காணப்பட்ட ரூபா 82,700,248 பெறுமதியுடைய 40 மானியங்களின் செயற்பாடுகளில் ரூபா 40,643,471 பெறுமதியுடைய 20 செயற்திட்டங்கள் வணிகமயப்படுத்தப்பட வில்லை. | காணப்படுகின்றன. வணிகமயப்படுத்தப்படாத 18 ஆராய்ச்சிகள் தொழில்நுட்ப அபிவிருத்தியை நோக்கி வழிகாட்டப்பட்டன. பிரதான நோக்கங்கள், மூலகங்களின் அபிவிருத்தி மற்றும் மானியங்களைப் பெறும் காலப்பகுதிக்குள் குறித்த செயற்திட்டத்தின் பொருட்கள் / செயன்முறை என்பன குறித்த சில செயற்திட்டங்களினை வணிகமயமாக்காமைக்கான காரணங்களாகக் காணப்பட்டன. எவ்வாறாயினும், ஆராய்ச்சி வெளியீடுகளினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு மற்றும் செயற்திட்ட வெளியீடுகளினை வணிகமயமாக்குவதற்கு தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நன்கொடையளிக்கப்பட்டவர்களுக்கு அடிக்கடி அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்கின்றன. | யாளர்களினை வழிநடத்துவதற்கு மற்றும் அந்த வெளியீடுகளினை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான முறையொன்று தாபிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2013 ஒக்தோபர் 01 இல் ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்ப மானிய செயற்திட்டம் TG/2013/TECH/D/03 இற்கான தேசிய விஞ்ஞான மன்றத்தின் பங்களிப்பு ரூபா 3,642,990 தொகையாகக் காணப்பட்டதுடன் அந்த செயற்திட்டம் 2016 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். 18 மாதம் வரை 3 சந்தர்ப்பங்களில் நீடிப்புக்களுக்கான ஆளுகை சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் பூர்த்தியாக்கவில் இறுதித் திகதி 2018 ஒக்தோபர் 02 ஆகக் காணப்பட்டது. நோயாளிகளுக்கான புனர்வாழ்வு கையொன்றை அபிவிருத்தி செய்வது குறித்த செயற்திட்டத்தின் நோக்கமாகக் காணப்படுகின்ற அதேவேளை, கணக்காய்வுத் திகதியான, 2019 மார்ச் 31 வரையிலும் தொடர்புடைய நோயாளிகளின் தேவைப்பாடுகளுக்காக அபிவிருத்தி செய்யப்பட்ட கையின் பொருத்தத்தன்மையை பரீட்சிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2013 ஒக்தோபரில் மானியங்கள் வழங்கப்பட்ட போதிலும், முதலாவது தவணைப் பணம் 2014 ஏப்ரலில் மாத்திரம் அறிவிக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட வெளியீட்டின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, 2017 ஏப்ரல் தொடக்கம் 2019 ஏப்ரல் வரை நீடிப்பொன்று அளிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, புனர்வாழ்வு கை (rehabilitation Arm) பரீட்சிப்புக்காக தயாராகக் காணப்படுகின்றது. | ஆராய்ச்சிகளின் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகளினை துரிதப் படுத்துவதற்கு ஆராய்ச்சியாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டியதுடன் ஆராய்ச்சிகளின் நலன்களினை சமூகமயப்படுத்த முறைமையொன்று நிறுவப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஆராய்ச்சியொன்றின் பூர்த்தியின் பின்னர் 03 மாதங்களுக்குள் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 மே 09 இல் ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி செயற்பாடுகள் மற்றும் ரூபா 1,914,250 தொகையான மானியப் பெறுமதியொன்றுடனான RG/2011/AG/06 ஆராய்ச்சியின் இறுதி செயற்திட்ட அறிக்கை 2016 ஏப்ரல் 27 இல் பூர்த்தியாக்கப்பட்டதுடன், ஒரு வருட தாமதமொன்றின் பின்னர் 2017 மார்ச் 24 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் தேசிய விஞ்ஞான மன்றம் ஞாபகமூட்டியிருந்த போதிலும், இறுதி அறிக்கையைப் பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் காணப்பட்டன. தற்போது, ஆராய்ச்சி பிரிவு உரிய திகதியில் இறுதி அறிக்கைகளினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. | உரிய திகதியில் இறுதி அறிக்கைகளினைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 2017 யூலையில் அங்கீகரிக்கப்பட்டுக் காணப்பட்ட ரூபா 5,353,815 பெறுமதியுடைய 6 உபகரணங்களின் மானியங்களுடன் தொடர்புடைய பணம் 7-15 வரையான வீச்சினையுடைய மாதங்கள் தாமதமொன்றின் பின்னர் 2018 பெப்ரவரி மற்றும் ஒக்தோபரில் அளிக்கப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டில் மானியங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், நிறுவகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொடர்புடைய மூலதன பெறுகைகள் போதுமையற்றனவாகக் காணப்பட்டமையினால், முன்னுரிமை கட்டளையின் பிரகாரம் பணம் அளிக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் அவ்வாறான தாமத வகைகளை தவிர்ப்பதற்கு கட்டுநிதியை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் ஆராய்ச்சி உபகரணங்களின் உதவியை வழங்காதிருப்பதற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | மானியங்கள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் உடனடியாக பணத்தை அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 நிதிகளின் குறைப்பயன்படுத்துகை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 05 வருடங்களுக்கும் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் ஏனைய நடைமுறைச் சொத்துக்களின் கீழ் திறைசேரி வைப்புக்களாக ரூபா 3,298,965 தொகை காட்டப்பட்டதுடன் உற்பத்தித்திறன் நோக்கமொன்றிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி வைப்பு வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதென 2019 மார்ச் 01 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்ப பட்டிருக்கின்றது. | திட்டமிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக திறைசேரியிடமிருந்து நிதிகள் பெறப்பட்டமையால், தாமதமின்றி குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் அவ்வாறான நிதிகள் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்றத்தின் நோக்கங்களுடன் தொடர்புடையள செயற்படுத்தப்பட வேண்டிய 6 முக்கிய தொழிற்பாடுகளின் கீழ் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றிற்காக ரூபா 260 மில்லியன் ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த முக்கிய தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய இனங்காணப்பட்ட உப தொழிற்பாடுகளுக்காக மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் தனித்தனியாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், அந்த உப செயற்பாடுகளின் நிதிசார் செயல்முன்னேற்றத்தை தனித்தனியாக மதிப்பிடமுடியாதிருந்தது. | முக்கிய தொழிற்பாடுகளை செயற்படுத்தும் வழிகாட்டலொன்றாக உப செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருந்தது. ஆகையினால், முக்கிய தொழிற்பாடுகளுக்காக மாத்திரம் பாதீடு இனங்காணப்பட்டிருந்தது. | விபரமான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது 21 உப செயற்பாடுகளுடன் தொடர்புடைய அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளின் எண்ணிக்கை முக்கிய செயலாற்றல் குறிகளில் குறிப்பிடப்பட்டிருக்கா மையினால், நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளின் அடைவுகளுடன் ஒப்பிடுவதற்கு சாத்தியமற்றதாகக் காணப்பட்டது. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்ளும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் அளவுசார் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) இனங்காணப்பட்டிருந்தது. சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் அளவுசார் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகளை (KPI) இனங்காண முடியும். எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அடையப்பட்டிருந்ததென செயல்முன்னேற்ற மீளாய்வின் போது பொருத்தமான மதிப்பீடுகளினூடாக உறுதியளிக்கப் பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் அளவுசார் மற்றும் தரம்சார் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |